**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.73/2023**
**PW4**

| | | |
|---|---|---|
| Name | : | ராஜமாணிக்கம் |
| Father's Name | : | பெரியபையன் |
| Village | : | மேல்செவலாம்பாடி |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.07.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேல்செவலாம்பாடி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இறந்துபோன ராஜகோபால் செட்டியாரை தெரியும் . ஆஜர் எதிரியை தெரியும். தகராறு நடந்த அன்று நான் அவரை பார்த்தேன். சுமார் 21/2 ஆண்டுகளுக்கு தேதி ஞாபகம் இல்லாத ஒருநாள் சேத்துப்பட்டுக்கு காய்கறி வாங்க சென்றேன். நான் ராஜகோபால் செட்டியார் கடைக்கு அவ்வப்போது போய் வருவேன் . அதுபோல் அன்றும் அந்த கடைக்கு போனேன் . மதியம் 3 மணிக்கு ஆஜர் எதிரி மூர்த்திக்கும் , செட்டியாருக்கும் ஏதோ பிரச்சனை ஏற்பட்டது . அப்போது மூர்த்தி செட்டியாரை சட்டையை பிடித்து சுவற்றில் மோதி முகத்தில் குத்தினார் . செட்டியாருக்கு வாயில் ரத்தம் வந்து மயக்கமாகி விழுந்துவிட்டார் . செட்டியாரின் மகனும் , மருமகளும் அங்கிருந்தார்கள். உடனே அவரை சேத்துப்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள். மூர்த்தி இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டார்.

நான் அதன்பின்னர் வீட்டுக்கு சென்றுவிட்டேன் . 10 நாட்ளுக்கு பின் ராஜகோபால் செட்டியார் இறந்துவிட்டார் என்று கேள்விபட்டேன். இது சம்மந்தமாக போலிசார்என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.